*thuringiensis* var. *kurstaki*) ஹெக்டேருக்கு 500–625 மிலி என்ற அளவில் தெளிக்கவும். அல்லது தையோடிகார்ப் 17% WP ஹெக்டேருக்கு 500 கிராம் என்ற அளவில் தெளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

தமிழகத்தில் விதைப்பு செய்யப்பட்டுள்ள உளுந்து மற்றும் பாசிப்பயறு பயிர்களில் வேரழுகல் மற்றும் மஞ்சள் தேமல் நோய்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. வேரழுகல் நோயை கட்டுப்படுத்த கார்பன்டசிம் 50 WP ஒரு லிட்டர் தண்ணீர்க்கு 1 கிராம் என்ற அளவில் பாதிக்கப்பட்ட பயிர்களின் வேர் மற்றும் மண் நனையுமாறு ஊற்ற வேண்டும். உளுந்து மற்றும் பாசிப்பயறு விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த மஞ்சள் தேமல் நோய் நிர்வாக வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகிறது.

- விதைகளை போராக்ஸ் @ 2 கிராம் / கிலோ மற்றும் 50 மி.லி நொச்சி இலைச்சாறு (10 சதம்) கரைசலில் அரை மணி நேரம் ஊறவைத்து பின் தயமீத்தாக்சிம் 30% FS @ 10 மி.லி / கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யவேண்டும்.
- பேசில்லஸ் சப்டிலிஸ் ஹெக்டேருக்கு 2.5 கிலோ என்ற அளவில் 100 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து மண்ணில் இடவேண்டும்.
- மக்காச்சோள பயிரினை இரண்டு வரிசையில் வயலின் ஓரங்களில் வரப்பு பயிராக பயிரிட வேண்டும்.
- மஞ்சள் ஒட்டுப்பொறி ஒரு எக்டருக்கு 12 எனும் எண்ணிக்கையில் வைக்கவேண்டும்.
- நோய் பாதிக்கப்பட்ட செடிகளை விதைத்த 25 நாட்கள் வரை களைந்து அழிக்கவும்.
- விதைத்த 30–ம் நாள் 0.1 சத போராக்ஸ் மற்றும் 10 சத நொச்சி இலைச்சாறு தெளிக்கவும்.
- தேவையெனில் நோய் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த அசெடிமிபிரிட் 20 WP எக்டருக்கு 250 கிராம் தெளிக்கவும்.

### 4. எண்ணெய் வித்துக்கள்

#### i. எள்

கடலூர் மாவட்டத்தில் மிரிட் நாவாய்ப்பூச்சி தாக்குதல் காணப்பட்டது. இப் பூச்சியைக் கட்டுப்படுத்த, 5% வேப்பங்கொட்டைச் சாறு (ஹெக்டேருக்கு 25 கிலோ) அல்லது குயினால்பாஸ் 25 EC ஹெக்டேருக்கு 1000 மிலி என்ற அளவில் தெளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எள் பயிரில் சாம்பல் நோய் (4–5 நோய் தாக்க சதவீத குறியீடு), வேரழுகல் (0–17 சதவீதம்) மற்றும் பில்லோடி நோய் (18–20 சதவீதம்) தாக்குதல் கண்டறியப்பட்டுள்ளது. சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த எக்டருக்கு நனையும் கந்தகம் 80 WP @ 1.25 கிலோ (அ) கார்பன்டசிம் 50 WP @ 500 கிராம் (அ) மேன்கோசெப் 75 WP @ 1.0 கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும். வேரழுகல் நோயை கட்டுப்படுத்த கார்பன்டசிம் 50 WP ஒரு லிட்டர் தண்ணீர்க்கு 1 கிராம் என்ற அளவில் பாதிக்கப்பட்ட பயிர்களின் வேர் மற்றும் மண் நனையுமாறு ஊற்ற வேண்டும். பில்லோடி நோயைப் பரப்பும் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த எக்டருக்கு இமிடாக்குளோப்ரிட் 17.8 SL @ 100 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

#### ii. நிலக்கடலை

விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இலைத்துளைப்பான் (சுருள் பூச்சி) பாதிப்பு காணப்பட்டது. இலைத்துளைப்பானைக் கட்டுப்படுத்த, இரவு 8 மணி முதல் 11 மணி வரை தரை மட்டத்தில் விளக்குப் பொறிகளை அமைக்கவும். குயினால்பாஸ் 25 EC ஹெக்டேருக்கு 1400 மிலி என்ற அளவில் தெளிக்கவும்.

கடலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலையில் வேரழுகல் நோயின் தாக்குதல் 10 சதவீத அளவு வரை கண்டறியப்பட்டுள்ளது. இந்நோயை மேலாண்மை செய்ய பாதிக்கப்பட்ட வயல்களில் கார்பன்டசிம் 50 WP ஒரு லிட்டர் தண்ணீர்க்கு 1 கிராம் என்ற அளவில் பாதிக்கப்பட்ட பயிர்களின் வேர் மற்றும் மண் நனையுமாறு ஊற்ற வேண்டும்.

## 5. பருத்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் தண்டு கூன்வண்டு (Stem weevil), மாவுப்பூச்சி மற்றும் இளம் சிவப்பு காய்புழு தாக்குதல் காணப்பட்டது.

தண்டு கூன்வண்டைக் கட்டுப்படுத்த, ஒரு கிலோ விதைக்கு 10 மிலி குளோர்பைரிபாஸ் 20 EC கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும் + விதைத்த 15 மற்றும் 30 வது நாட்களில் குளோர்பைரிபாஸ் 50 EC–ஐ ஹெக்டேருக்கு 1200 மிலி என்ற அளவில் செடியின் வேர்ப்பகுதியில் (Collar region) ஊற்ற வேண்டும் + மண் அணைத்தல் (Earthing up) செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது.

இளஞ்சிவப்பு காய்ப்புழுவைக் கட்டுப்படுத்த:

- முதிர்ந்த அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க, ஹெக்டேருக்கு 12 என்ற அளவில் இனக்கவர்ச்சிப் பொறிகளை (Pheromone traps) பயன்படுத்தவும்.
- கீழ்க்காணும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்: எமாமெக்டின் பென்சோயேட் 5% SG ஹெக்டேருக்கு 190 கிராம் அல்லது டைஃப்ளூபென்சுரான் (Diflubenzuron) 25% WP ஹெக்டேருக்கு 300 கிராம் அல்லது தையோடிகார்ப் 75% WP ஹெக்டேருக்கு 1000 கிராம்.
- நீண்ட வறண்ட காலநிலைக்குப் பிறகு மழை பெய்யும்போது, பருத்தியில் வேர் அழுகல் நோயின் தீவிரம் அதிகரிக்கக்கூடும். எனவே, பாதிக்கப்பட்ட செடிகள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள ஆரோக்கியமான செடிகளின் அடிப்பகுதியில் கார்பென்டாசிம் 50WP (1 கிராம்/லிட்டர் என்ற அளவில்) ஊற்றி நனைக்க வேண்டும் அல்லது ஒரு ஹெக்டேருக்கு 2.5 கிலோ என்ற அளவில் டிரைகோடெர்மா அஸ்பெரெல்லம் மற்றும் பேசில்லஸ் சப்டிலிஸ் ஆகியவற்றை, 500 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் சேர்த்து மண்ணில் இட பரிந்துரைக்கப்படுகிறது.

## 6.கரும்பு

விருதுநகர் மாவட்டத்தில் இளங்குருத்து துளைப்பான் (Early shoot borer) தாக்குதல் காணப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் வெள்ளை வேர்ப்புழு (White grub), கொண்டை மாவுப்பூச்சி (Crown mealy bug), போக்கா போயிங் நோய் (Pokkahboeng) மற்றும் சிலந்திப்பேன் (Mite) ஆகியனவற்றின் தாக்குதல் காணப்பட்டது.கொண்டை மாவுப்பூச்சி (Crown mealy bug)போக்கா போயிங் நோய்அரியலூர், விழுப்புரம், கடலூர் மாவட்டதில் காணப்பட்டது.சேலம் மாவட்டத்தில் வெள்ளை வேர்ப்புழு பாதிப்பு காணப்பட்டது.

i. **பொக்கொபோயிங் மற்றும் குருத்து மாவுப்பூச்சி இணைத்தாக்குதல்**

தமிழகத்தில் கரும்பு பயிரிடப்பட்டுள்ள பெருவாரியான மாவட்டங்களில் இந்நோய் – பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள் பரிந்துரைக்கப்படுகிறது.

**நடவுப் பயிர்**

- நடவு செய்வதற்கு முன் விதைக் கரணைகளை 0.1% புரப்பிகோனோசோல் 25%EC (250 மிலி/ஹெக்டேர்) + இமிடாகுளோபிரிட் 70WS (250 மிலி / ஹெக்டேர்) திரவத்தில் 20 நிமிட்கள் நனைத்து கரணை நேர்த்தி செய்வதன் மூலம் முன்கூட்டியே இந்த நோய் பரவுவதைத் தவிர்க்கலாம்.
- பயிர் ஊட்டச்சத்து குறைபாடுள்ள கரும்புப்பயிர்களை நோய்க்காரணிகள் எளிதில் தாக்கி சேதத்தை உண்டுபண்ணுவதைத் தவிர்க்க கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் பரிந்துரைத்துள்ள TNAU கரும்பு பூஸ்டரை மறுதாம்பு / கரும்பு நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் ஒரு ஹெக்டேருக்கு 2.5, 3.5 மற்றும் 5 கிலோ முறையே தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்கவும்.
- நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன், ஹெக்டேருக்கு இமிடாக்ளோப்ரிட் 17.8 SL @ 200 மி.லி + ப்ரோபிகோனசோல் 25 EC @ 500 மி.லி ஆகிய இரசாயன பூச்சிக்கொல்லிகளை தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து இலை வழியாகத் தெளிக்கவும்.

**மறுதாம்புப் பயிர்**

- ஒவ்வொரு முறை மறுதாம்பு பயிர் வளர்ப்பின் போதும் மற்றும் மண் அணைக்கும்  சமயத்திலும் பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை இடவும்
- மறுதாம்பு பயிர் வளர்ப்பு தொடங்கிய பின் 45, 60 மற்றும் 75–வது நாட்களில் TNAU கரும்பு ஊக்கியை ஹெக்டேருக்கு முறையே 2.5 கி.கி, 3.5 கி.கி மற்றும் 5 கி.கி ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்கவும்.
- நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன், ஹெக்டேருக்கு இமிடாக்ளோப்ரிட் 17.8 SL @ 200 மி.லி + ப்ரோபிகோனசோல் 25 EC @ 500 மி.லி ஆகிய இரசாயன பூச்சிக்கொல்லிகளை தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து இலை வழியாகத் தெளிக்கவும்.
- மீண்டும் பாதிப்பு தென்பட்டால், ஹெக்டேருக்கு ப்ரோபிகோனசோல் 25 EC @ 500 மி.லி + க்ளோத்தியானிடின் 50 WG @ 250கி ஆகியவற்றை தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து 20 நாட்கள் இடைவெளியில் இலை வழியாகத் தெளிக்கவும்.

**வெள்ளை வேர்ப்புழுக்களைக் (White grubs) கட்டுப்படுத்த:**

- முதிர்ந்த வண்டுகளைக் கவர்ந்து அழிக்க விளக்குப் பொறிகளை அமைக்கவும்.
- வேம்பு, பெருமரம் (Ailanthus) மற்றும் வேல மரங்களில் (Acacia) காணப்படும் முதிர்ந்த வண்டுகளைச் சேகரித்து அழிக்கவும்.
- இமிடாகுளோப்ரிட் 17.8% SL மருந்தை ஹெக்டேருக்கு 350 மிலி என்ற அளவில் தெளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

**மஞ்சள் இலை நோய்**

கடலூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பயிரில் தொடர்ந்து மஞ்சள் இலை நோயின் தாக்கம் காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த, நடவிற்கு நோயற்ற கரணைகள் பயன்படுத்த வேண்டும். கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுதாம்பு பயிரைத் தவிர்க்கவும். பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்களைப் பயன்படுத்தவும். எளிதில் பாதிக்கக் கூடிய கரும்பு ரகங்களான, CoV

09356 மற்றும் இனம் தெரியாத ரகங்கள் நடவு செய்வதைத் தவிர்க்கவும். கரும்பு தோகைகளை அகற்றி பயிர்களை களை இல்லாத நிலையில் பராமரிக்கவும்.

**7. காய்கறிப் பயிர்கள்**

**i. தக்காளி**

தக்காளி பயிரில் புள்ளி வாடல், இலை சுருட்டு மற்றும் முன்பருவ இலைக்கருகல் நோய்களின் தாக்குதல் பல்வேறு தக்காளி பயிரிடப்படும் மாவட்டங்களில் பரவலாக காணப்படுகிறது. புள்ளி வாடல் மற்றும் இலை சுருட்டு நச்சுயிரிகளை முறையே பரப்பும் இலைப்பேன் மற்றும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த எக்டருக்கு டைமீத்தோயேட் 30 EC @ 500 மி.லி. அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 SL @ 100 மி.லி. என்ற அளவில் தெளிக்கலாம். பூச்சிக்கொல்லி மருந்தை 15 நாட்கள் இடைவெளியில் நோயின் தீவிரத்தைப் பொறுத்து மீண்டும் தெளிக்கவும். முன்பருவ இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த எக்டருக்கு மேன்கோசெப் 75 WP 500 கிராம் (அ) அசாக்சிஸ்ட்ரோபின் + டைபென்கோனசோல் 500 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.

**ii. கத்தரி**

புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தண்டு மற்றும் காய்த்துளைப்பான் தாக்குதல் காணப்பட்டது. தத்துப் பூச்சி தாக்குதல் கோயம்புத்தூர் மாற்று மதுரை மாவட்டதில் காணப்பட்டது. தண்டு மற்றும் காய்த்துளைப்பான் தாக்குததலைக் கட்டுப்படுத்த ஆரம்பக் கட்டத்திலேயே தாக்குதலுக்கு உள்ளான நுனித் தண்டுகள் மற்றும் துளைகள் உள்ள காய்களைப் பறித்து அழிக்க வேண்டும். செயற்கை பைரத்ராய்டுகள் (synthetic pyrethroids) பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். 5% வேப்பங்கொட்டைச் சாறு (ஏக்கருக்கு 10 கிலோ) அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5% SG மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் அல்லது ஃப்ளூபென்டையமைடு 20 WDG மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 7.5 கிராம் என்ற அளவில் தெளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. தத்துப் பூச்சியைக் (leafhopper) கட்டுப்படுத்த, டைனோடெஃபுரான் 20 SG ஹெக்டேருக்கு 87.5 கிராம் அல்லது ஃப்ளோனிகமிட்

50% WG ஹெக்டேருக்கு 200 கிராம் என்ற அளவில் தெளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

**iii. வெண்டை**

தண்டு மற்றும் காய் துளைப்பான் தாக்குதல் திருச்சிராப்பள்ளி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் காணப்பட்டது.

- காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் @ 2 கிராம் / லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. இனக்கவர்ச்சிப்பொறி ஏக்கருக்கு 5 எண்கள் வைக்கவும். சேதமடைந்த காய்களை சேகரித்து அழிக்கவும். ட்ரைக்கோக்கிரம்மா முட்டை ஒட்டுண்ணிகளை ஏக்கருக்குஒரு சி சி என்ற அளவில் விடவும், குயினால்பாஸ் 25% EC @ 8 மி லி / 10 லிட்டர் அல்லது குளோராட்ன்ரானிலிப்ரோல் 18.5 SC @ 3 மி லி / 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.
- கோவை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள வெண்டைக்காய் பயிரில் நரம்புத் தேமல் நோய் தென்படுகிறது. இந்த நோயை பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த எக்டருக்கு மீத்தைல் டெமட்டான் 800 மில்லி அல்லது தையோமீத்தாக்ஸாம் 250 கிராம் என்ற அளவில் தெளித்து நோயினை கட்டுப்படுத்தலாம் என அறிவுறுத்தப்படுகிறது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து மீண்டும் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் உள்ள நரசிபுரம் கிராமத்தில், வெண்டை பயிரில் வேர் முடிச்சு நூற்புழுவின் தாக்குதல் கண்டறியப்பட்டது. இதில் பெரிய அளவிலான கூட்டு வேர்முடிச்சுகள் காணப்பட்டது. **பரிந்துரை:** நன்கு மக்கிய தொழு உரத்துடன் சேர்த்து ஹெக்டேருக்கு 2.5 கிலோ என்ற அளவில் *போகோனியா கிளாமிடோஸ்போரியா* பூஞ்சாணத்தை மண்ணில் இடுவது அல்லது ஹெக்டேருக்கு 33.3 கிலோ என்ற அளவில் கார்போஃப்யூரான் 3G குருணை மருந்தை மண்ணில் இடுவது பரிந்துரைக்கப்பட்டது.

**iv. மிளகாய்**

கோயம்புத்தூர், இராமநாதபுரம், விருதுநகர் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இலைப் பேன் (Thrips), சிலந்தி மற்றும் வெள்ளை ஈ தாக்குதல்காணப்பட்டது. இலைப் பேன் மற்றும் வெள்ளை ஈ ஐ கட்டுப்படுத்த,

அகத்தியை ஊடுபயிராகப் பயிரிடவும். இமிடாகுளோப்ரிட் 17.8 SL மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மிலி அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5% SG மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். இலை சிலந்தி தாக்குதலைக் கட்டுப்படுத்த டையாபென்தியுறான் 50 WP @ 10 கிராம் / 10 லிட்டர் அல்லது இமாமேக்டின்பென்சோயேட் 5 SG @ 4 கிராம் / 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

தமிழகத்தில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய் பயிரில் இலை சுருட்டு மற்றும் தேமல் நோய்களின் தாக்குதல் காணப்படுகிறது. நோய் தாக்குண்ட செடிகளை அகற்றி அழித்து விட்டு, நோயை பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த எக்டருக்கு டைமீத்தோயேட் 30 EC @ 500 மி.லி. அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 SL @ 100 மி.லி. என்ற அளவில் தெளிக்கலாம். பூச்சிக்கொல்லி மருந்தை 15 நாட்கள் இடைவெளியில் நோயின் தீவிரத்தைப் பொறுத்து மீண்டும் தெளிக்கவும்.

**v. முருங்கை**

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் தேயிலைக் கொசு (Tea mosquito bug) பாதிப்பு காணப்பட்டது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த, காய் பிடிக்கும் பருவத்தில் குறைந்தது நான்கு முறை 21 நாட்களுக்கு ஒருமுறை மாலத்தியான் 50 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி அல்லது 3% வேப்பெண்ணெய் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**vi. முட்டைகோஸ் மற்றும் உருளைக் கிழங்கு**

இலையை தின்னும் புழுக்கள் தாக்குதல் நீலகிரி மாவட்டதில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03% WSP (300 ppm ) @ 3.5 கிராம் / லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**vii. பூசணி வகை கொடிப்பயிர்கள்**

பூசணி வகைக் கொடி பயிர்களில் சாம்பல் நோயின் அறிகுறி தென்படுவதினால் எக்டருக்கு டினோகேப் 48 EC @ 500 மி.லி. அல்லது கார்பன்டசிம் 50 WP @ 500 கிராம் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8. பழப் பயிர்கள்

i. மா

இலைப் பேன் தாக்குதல் தேனி மாவட்டத்தில் காணப்பட்டது. இதனைக்கட்டுப்படுத்த டையாபெண்தியூரான் 50 WP @ 20 கிராம்/ 10 லிட்டர்

ii. கொய்யா

திருச்சி மாவட்டத்தில் மாவுப்பூச்சி தாக்குதல் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த, கிரிப்டோலீமஸ் இரைவிழுங்கி வண்டுகளை ஒரு மரத்திற்கு 10 வீதம் வெளியிடப் பரிந்துரைக்கப்படுகிறது. பழ ஈக்களின் தாக்குதல் தேனி மாவட்டதில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த மீத்தைல் யூஜீனால் பொறி ஏக்கருக்கு 4 வைக்கவும், வேப்ப எண்ணை 3% தெளிக்கவும்.

கொய்யா மரங்களில், *மெலாய்டோகைன் என்டெரோலோபி* என்ற வேர் முடிச்சு நூற்புழு கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, தென்காசி, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் பரவலாகக் காணப்பட்டது. விவசாயிகள் ஒவ்வொரு மாற்று மாதமும், மரத்திற்கு 500 கிராம் என்ற அளவில் உயிர் காரணி செறிவூட்டப்பட்ட தொழு உரத்தைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டனர். உயிர் காரணி செறிவூட்டப்பட்ட தொழு உரத்தைத் தயாரிக்க, *பர்பியூரோசிலியம் லிலாசினம்* மற்றும் *பொக்கோகோனியா கிளமிடோஸ்போரியா* ஆகியவற்றை தலா 2.5 கிலோ எடுத்து, 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து, தண்ணீர் தெளித்து, இரண்டு முதல் மூன்று வாரங்களுக்கு நிழலில் வைக்க வேண்டும். மரத்தின் பாத்தியைச் சுற்றி சாமந்திப் பூ செடிகளை வளர்க்கவும் விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

iii. எலுமிச்சை

தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் சிலந்திப்பேன் தாக்குதல் காணப்பட்டது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த, டயபென்தியூரான் (Diafenthiuron) 50 WP மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் என்ற அளவில் தெளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

**iv. வாழை**

வாழை பயிரிடப்பட்டுள்ள பெருவாரியான மாவட்டங்களில் சிகடோகா இலைப்புள்ளி நோய் பரவலாக காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த

- மிகவும் பாதித்த ஒன்று அல்லது இரண்டு அடி இலைகளை அகற்றி எரித்துவிடவும் அல்லது மண்ணில் புதைத்து விடவும்.
- எக்டருக்கு கார்பன்டசிம் 50% WP @ 500 கி அல்லது மேன்கோசெப் 75% WP 1கிலோ ஒரு மாத இடைவெளியில் தெளிக்கவும். மாற்றாக புரோபிகொனசோல் 25 EC 500 மி.லி/எக்டர் + மினரல் எண்ணெய் 10 மி.லி/ 1 லிட்டருக்கு கலந்து தெளிக்கவும். ஒட்டும் திரவம் டீபால் அல்லது சோப்பு கரைசல் 5 மி.லி / 10 லிட்டர் மருந்து கரைசலுடன் சேர்க்கவும்.

**v.திராட்சை**

- தேனி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சையில் சாம்பல் நோயின் பாதிப்பு காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த ஹெக்சாகோனசோல் 5% EC @ 1 மில்லி / லிட்டர் அல்லது நனையும் கந்தகத் துகள் 80% WP @ 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் நீரில் கலந்து தெளிக்கலாம்.

**9. நறுமண மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள்**

**i. கருவேப்பிலை**

சில்லிடு அல்லது குதிக்கும் நாவய்ப்பூச்சி மற்றும் இலைச்சுருட்டுப் புழு தாக்குதல் கோவை மாவட்டத்தில் காணப்பட்டது.

**சில்லிட் மற்றும் இலைச்சுருட்டுப்புழு தாக்குதலுக்கான தீவிர ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை**

- சில்லிட் பூச்சிகளுக்கு ஹெக்டேருக்கு 50 எண்கள் மஞ்சள் நிற ஒட்டுப்பொறிகள் (30 செ.மீ x 15 செ.மீ) வைக்க வேண்டும்.
- இலைச்சுருட்டுப் புழுவைக் கண்காணிக்க ஏக்கருக்கு ஒரு ஒளிப்பொறியை நிறுவ வேண்டும்.
- இலைச்சுருட்டுப்புழுவைக் கட்டுப்படுத்த முட்டைகளைத் தாக்கும் *டிரைக்கோகிரம்மா கைலோனிஸ்* ஒட்டுண்ணியை இருமுறை – கவாத்து

செய்த 35 மற்றும் 50–வது நாளில் எக்டருக்கு 5 cc என்ற அளவில் பயன்படுத்தவும். மேலும் கிரைசோபெர்லா சாஸ்ட்ரோவி சில்லெமி (*Chrysoperla zastrowஜ sillemi*) என்ற பச்சைக் கண்ணாடி இறக்கை பூச்சி இரை விழுங்கி முட்டைகளை எக்டருக்கு 10000 வீதம் இரு முறை – கவாத்து செய்த 40 மற்றும் 55 வது நாளில் தாக்கப்பட்ட மரங்களில் விட்டும் கட்டுப்படுத்தலாம்.

- சில்லிட் மற்றும் இலைச்சுருட்டுப்புழுக்களைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைக் கரைசல் 2.5% + மினரல் எண்ணெய் 0.25% பயன்படுத்தலாம்.
- சில்லிட் பூச்சிக்களைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைக் கரைசல் 5% (25 கிலோ/ ஹெக்டேர் பயன்படுத்தலாம்.
- நன்மை செய்யும் பூச்சிகளை அதிகரிக்க ஊடுபயிராக தட்டைப்பயறையும் தடுப்புப் பயிராக சோளத்தையும் பயிர் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

**ii. தென்னை**

வெள்ளை ஈக்கள், காண்டாமிருக வண்டு, சிவப்புக் கூண்வண்டு, எரியோபைட் சிலந்தி தாக்குதல் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் காணப்பட்டது. கருந்தலை புழு தாக்குதல் கோயம்புத்தூர் மாவட்டதில் காணப்பட்டது.

**வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை**

- மஞ்சள் நிறபாலித்தீன் தாள்களால் உருவாக்கப்பட்ட, இரண்டு புறமும் விளக்கெண்ணெய் தடவப்பட்ட மஞ்சள் நிறஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி × அகலம் 1.5 அடி) ஹெக்டேருக்கு 50 வீதம் 6 அடிஉயரத்தில் தொங்கவிட்டுஅல்லது தென்னைமரங்களின் தண்டுப்பகுதியில் சுற்றியும் ஈக்களின் நடமாட்டத்தை கண்காணித்தும் கவர்ந்தும் அழிக்கலாம்.
- தாக்கப்பட்ட மரங்களில் உள்ளகீழ்மட்ட ஓலைகளின் உட்பகுதியில் படுமாறு விசைத் தெளிப்பானைக் கொண்டு மிக வேகமாக தண்ணீரைபீய்ச்சி அடித்து தெளிப்பதன் மூலமாகவும் ஈக்களின் எண்ணிக்கை பெருகுவதை குறைக்கலாம்.

- வெள்ளை ஈக்களின் இளங்குஞ்சுகளை கட்டுப்படுத்தும், திறன் கொண்ட ஒட்டுண்ணி குளவி *எண்கார்சியா* (*Encarsia guadeloupe*) கூட்டுப்புழு பருவத்தை உள்ளடக்கிய தென்னை ஒலைகள் ஏக்கருக்கு 10 இலைதுண்டுகள் வீதம் 10 மரத்திற்கு ஒரு இலைத்துண்டு என்ற எண்ணிக்கையில் தாக்கப்பட்ட ஒலைகளின் மீது 10 மரம் இடைவெளியில் வைத்தும், கட்டுப்படுத்தலாம்.
- கிரைசோபிட் (Chrysopid) என்ற பச்சைகண்ணாடி இறக்கை பூச்சி இரை விழுங்கி முட்டைகளை ஏக்கருக்கு 400 வீதம் தாக்கப்பட்ட மரங்களில் வைத்தும் கட்டுப்படுத்தலாம்.
- *என்கார்சியா* ஒட்டுண்ணிகளின் செயல்பாடுகளை அதிகரிக்க தென்னை மரங்களுக்கு இடையே வாழை, கல்வாழை மற்றும் சீத்தா செடிகளை ஏக்கருக்கு 20–25 என்ற எண்ணிக்கையில் நடவும்.
- ஒரு லிட்டர் தண்ணிருக்கு 5 மில்லி வேப்பெண்ணைய் மற்றும் ஒட்டும் திரவம் ஒரு மில்லி என்ற அளவில் கலந்து இலைகளின் அடிப்பகுதியில் படுமாறு தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- சுருள் வெள்ளைஈக்களின் தாக்குதலால் ஏற்படும் கரும்பூசணத்தை கட்டுப்படுத்த மைதா மாவு பசை கரைசலை ஒரு லிட்டர் தண்ணீரில் 25 கிராம் மற்றும் ஒட்டும் திரவம் ஒரு மில்லி சேர்த்து கீழ் இலை அடுக்குகளில் படிந்திருக்கும் கரும்பூசாணங்களின் மேல் நன்றாக படுமாறு தெளிக்கவும். மைதா மாவு பசை தெளித்த 3 முதல் 5 நாட்களில் இலைகளில் படிந்திருந்த கரும்பூசணங்கள் வெயிலில் காய்ந்து உதிர்ந்து விடும்.
- செயற்கை பைரித்திராய்டு மற்றும் இரசாயன பூச்சிக்கொல்லிகள் இயற்கை எதிரிகளை அழித்து விடுவதால் அவற்றை அறவே பயன்படுத்தவே கூடாது.
- பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இட்டுதண்ணீர்பாய்ச்சவேண்டும்.

**காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை**

- இறந்த மரங்களை அப்புறப்படுத்தி எரித்து விடவும்.
- எருக்குழியில் காணப்படும் புழுக்கள் மற்றும் கூட்டுப் புழுக்களைச் சேகரித்து அழிக்கவும்.

- மூன்று அந்துருண்டைகளை நடுக்குருத்தைச் சுற்றியுள்ள 3 மட்டை இடுக்குகளில் ஒன்று வீதம் வைக்கவும் அல்லது வேப்பங்கொட்டை தூள் 150 கிராம் மற்றும் காய்ந்த மணல் 300 கிராம் என்ற அளவில் கலந்து நடுக்குருத்துப் பகுதியில் தாவிவிடலாம்.
- எருக்குழியில் வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க மழைக்காலங்களில் பச்சை மஸ்கார்டின் (*மெட்டாரைசியம் அனிசோப்ளியே*) என்ற பூஞ்சாணத்தை $5x10^{11}$வித்துக்கள்/$மீ^3$ என்றஅளவில் ஊற்றலாம்.
- ரைனோலியூர் கவர்ச்சிப் பொறிகளை எக்டருக்கு ஒன்றுவீதம் வைத்துஆண் மற்றும் பெண் வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

**சிவப்பு கூன் வண்டு ஒருங்கிணைந்த மேலாண்மை**

- வண்டினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை ஆரம்பநிலையில் கண்டறிவதுகடினம் என்பதால் வரும் முன் காக்கும் வழி முறைகளுக்கு முக்கியதுவம் அளிக்கவேண்டும்.
- காண்டாமிருகவண்டின் தாக்குதல் கூன் வண்டின் தாக்குதலுக்கு வழிவகுப்பதால், பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை பின்பற்றவேண்டும்.
- மரத்தில் ஏற்படும் காயங்களில் கூன்வண்டு முட்டையிடுவதால், காயங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
- பச்சை மட்டைகளை வெட்டுவதைத் தவிர்க்கவும், அவசியம் ஏற்பட்டால் தண்டுப் பகுதியிலிருந்து 3 அடிதள்ளி வெட்டவும்.
- இடிதாக்கிய, கூன் வண்டு தாக்கிய மாங்கள் தோப்பில் இருந்தால், உடனடியாக அப்புறப்படுத்தி தீயிட்டு அழிக்கவேண்டும்.
- கவர்ச்சிப் பொறிகள் எக்டருக்கு ஒன்றுவீதம் வைத்து சிவப்பு கூன் வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.
- கவர்ச்சிப் பொறியில் கவரப்படும் வண்டுகளை அவ்வப்போது கண்காணித்து அழிக்கவேண்டும்.

**எரியோபைட் சிலந்தியை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை**

- சரியான உர மற்றும் நீர் நிர்வாகம் செய்வதன் மூலம் மட்டுமே ஈரியோபையிட் சிலந்தியின் தாக்குதலை குறைக்க முடியும். தாக்கப்பட்ட மரங்களுக்கு யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2.0 கிலோ, பொட்டாஷ் 3.5 கிலோ, நுணநூட்ட சத்து 1 கிலோ, ஜிப்சம் 1 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ, மக்கியகுப்பை 50 கிலோ, இந்த உர அளவுகள் ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு இந்த உரத்தை இரண்டாக பிரித்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை இட வேண்டும்.
- தாக்கப்பட்ட மரங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் அசாதிராக்டின்(1%) 3 மில்லி (அல்லது) ஒரு லிட்டர் தண்ணீருக்கு வேப்பெண்ணெய் 30 மில்லி மற்றும் ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து ஜனவரி, மார்ச் மற்றும் மே மாதங்களில் தெளிக்கலாம். குறிப்பாக 45 நாள் குரும்பைகளில் தெளித்தால் போதுமானது.
- மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தென்னை டானிக்கை மரத்திற்கு 200 மிலி என்றஅளவில் ஆறு மாத இடைவெளியில் வருடத்திற்கு 2 முறை வேர் மூலம் செலுத்தவும்.

**கருந்தலை புழு மேலான்மை**

- அதிகமாக தாக்கப்பட்ட கீழ் மட்ட இலைகளை தண்டு பகுதியில் இருந்து 3 அடி விட்டு வெட்டி எரித்து விட வேண்டும்.
- ஹெக்டேருக்கு 3 விளக்கு பொறி வைத்து அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும்.
- தாக்குதலின் ஆரம்ப நிலையில் பிரக்கான ஒட்டுண்ணி ஏக்கருக்கு 21 பாக்கெட் அளவில் 21 நாட்கள் இடைவெளியில் 2–3 முறை விட்டு கட்டுபடுத்தலாம்.
- பரிந்துரைக்கபட்ட உரங்களை இடவேண்டும்.

**வேர் வாடல் நோய்**

தென்னையில் வேர் வாடல் நோயானது கோயம்புத்தூர், தேனி, திருப்பூர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பரவலாக

காணப்படுகிறது. இந்நோயினை கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.

- தீவிரமாக பாதிக்கப்பட்ட மரங்களை வெட்டி அகற்ற வேண்டும்.
- சரியான வடிகால் வசதி செய்யவேண்டும்.
- பசுந்தாள் உரங்களான தட்டைப்பயறு, சணப்பை அல்லது தக்கைப்பூண்டு ஆகியவற்றை வட்டப்பாத்தி அல்லது தோப்பு பகுதி முழுவதும் வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுது விட வேண்டும்.
- பரிந்துரைக்கப்பட்ட அளவான ஒரு மரத்திற்கு தொழு உரம் – 50 கிலோ, வேப்பம் புண்ணாக்கு – 5 கிலோ, யூரியா – 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் – 2 கிலோ மற்றும் மூரியேட் ஆப் பொட்டாஷ் – 3.5 கிலோ என்ற அளவில் சரி பாதியாக பிரித்து ஆறு மாத இடைவெளியில் வருடத்திற்கு இரண்டு முறை இட வேண்டும்.
- ஒரு மரத்திற்கு 100 கிராம் *டிரைக்கோடெர்மா அஸ்பரெல்லம்,* 100 கிராம் *பேசில்லஸ் சப்டிலிஸ்,* 100 கிராம் அசோஸ்பைரில்லம், 100 கிராம் பாஸ்போபாக்டீரியா மற்றும் 50 கிராம் வேர்உட்பூஞ்சணம் ஆகியவற்றை 5 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து வருடத்திற்கு இரு முறை வட்டப்பாத்தியில் இட்டு மண்ணை கிளறிவிட வேண்டும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக் 40 மில்லியை 160 மில்லி தண்ணீருடன் கலந்து ஆண்டிற்கு இரண்டு முறை வேர் மூலம் உட்செலுத்த வேண்டும்.
- இலை அழுகல் நோய் தாக்குதல் தென்பட்டால், ஒரு மரத்திற்கு 2 மில்லி ஹெக்சாகோனசோல் 5% EC பூசணக்கொல்லியை 300 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து மரத்தின் குருத்துப் பகுதியில் ஊற்ற வேண்டும்.
- நோய்க்காரணியை பரப்பும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான கண்ணாடி இறக்கை மற்றும் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை பொடி 200 கிராம் சரிவிகித மணலுடன் கலந்து மரத்தின் குருத்துப் பகுதியில் இடவேண்டும்.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 'கோகோகான்' தாய் நுண்ணுயிர் கலவையை (5 லிட்டர்), கரும்புச்சர்க்கரை (10 கிலோ), தயிர் (5 லிட்டர்), சமையல் உப்பு (500 கிராம்) மற்றும் தண்ணீர் (150 லிட்டர்) உடன் கலந்து 5–7 நாட்கள் வளர்க்கவேண்டும். இவ்வாறு இனப்பெருக்கமான 'கோகோகான்' நுண்ணுயிரியை மரத்திற்கு 2 லிட்டர் என்ற அளவில் 8 லிட்டர் தண்ணீர் கலந்து வேர் பகுதி நன்கு நனையுமாறு மூன்று மாத இடைவெளியில் நோயின் தீவிரம் பொறுத்து வட்டப்பாத்தியில் ஊற்றவேண்டும். 'கோகோகான்' தாய்க்கலவை கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் நோயியல் துறையில் கிடைக்கிறது.

**அடித்தண்டழுகல் நோய்**

தென்னையில் அடித்தண்டழுகல் நோயானது, கோவை, திருப்பூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, காவேரி டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் ஆங்காங்கே காணப்படுகிறது. இந்நோயினை கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.

- பாதித்து இறந்த மரங்களை உடனடியாக வெட்டி அகற்ற வேண்டும்.
- பசுந்தாள் உரங்களான தட்டைப்பயறு, சணப்பை அல்லது தக்கைப்பூண்டு ஆகியவற்றை வட்டப்பாத்தி அல்லது தோப்பு பகுதி முழுவதும் வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுது விட வேண்டும்.
- ஒரு மரத்திற்கு வருடத்திற்கு 50 கிலோ தொழு உரம், 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 3.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் என்ற அளவில் சரி பாதியாக பிரித்து ஆறு மாத இடைவெளியில் இரண்டு முறை இட வேண்டும்.
- ஒரு மரத்திற்கு 100 கிராம் *டிரைக்கோடெர்மா அஸ்பரெல்லம்,* 100 கிராம் *பேசில்லஸ் சப்டிலிஸ்,* 100 கிராம் அசோஸ்பைரில்லம், 100 கிராம் பாஸ்போபாக்டீரியா மற்றும் 50 கிராம் வேர்உட்பூசணம் ஆகியவற்றை 5 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து வருடத்திற்கு இரு முறை வட்டப்பாத்தியில் இட்டு மண்ணை கிளறி விட வேண்டும்.

- 1 சத போர்டோ கலவை மரத்திற்கு 40 லிட்டர் என்ற அளவில் வேரை சுற்றி ஊற்ற வேண்டும் (குறிப்பு– நுண்ணுயிரிகள் பயன்படுத்தியிருந்தால், போர்டோ கலவை உபயோகத்தைத் தவிர்க்கவும்).
- ஒரு மரத்திற்கு ஹெக்சாகோனசோல் 5% EC 2 மி.லி என்ற அளவில் 100 மி.லி நீருடன் கலந்து 3–4 மாத இடைவெளியில் (நோயின் தீவிரம் பொறுத்து) வேர் மூலம் உட்செலுத்துதல் வேண்டும்.

**iii. காப்பி**

வெள்ளை தண்டுத் துளைப்பான் மற்றும் காப்பி கொட்டை துளைப்பான் தாக்குதல் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் காணப்பட்டது. தண்டுத் துளைப்பான் தாக்ககுதலைக் கட்டுப்படுத்த

- காப்பி செடிகளுக்கு போதுமான அளவு நிழல் ஏற்படுத்த வேண்டும்
- மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தாக்கப்பட்ட செடிகளை சோதனை செய்து அழிக்கவேண்டும்.
- இனக்கவர்சிப் பொறிகளை ஹெக்டேருக்கு 25 எண்கள் வைக்க வேண்டும்
- செடியின் தண்டுப் பகுதியில் ஒட்டி இருக்கும் மாத்துாள்களை தென்னை மட்டைகளை வைத்து அகற்ற வேண்டும்.
- தாக்கப்பட்ட தண்டுப்குதியில் 5x5 செ. மீ அளவில் துளைத்து குளோர்பைரிபாஸ் 25% EC @ 50 மிலி/ 10 லிட்டர் என்ற அளவில் கலந்து பருத்திப் பஞ்சில் நனைத்து கட்டவேண்டும்.

**காப்பிக் கொட்டை துளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்த**

- சரியான நேத்தில் அறுவடை செய்ய வேண்டும்
- உதிர்ந்து கிடக்கும் காப்பி கொட்டைகளை சேகரித்து எறித்து விடவேண்டும்
- பருவம் மாறி காய்க்கும் காப்பி கொட்டைகளை சேகரித்து எறித்து விடவேண்டும்
- காப்பி செடிகளுக்கு அதிகமான அளவு நிழல் கொடுக்ககூடாது

- போதுமான அளவு கவாத்து செய்வதால் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்கும். இதனால் தாக்குதல் குறையும்.
- காப்பி கொட்டைகளை பரிந்துரைக்கப்பட்ட அளவு ஈரப்பதத்திற்கு காயவைக்க வேண்டும். (அராபிக்கா–ரொபஸ்டா 10 % அராபிக்கா செர்ரி 10.5 %, ரொபஸ்டா செர்ரி 11 %).

**iv. மிளகு**

- இலைபேன் தாக்குதல் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின்@ 1% – 3 மில்லி /லிட்டர் அல்லது வேப்பெண்ணை (30 மில்லி /லிட்டர் அல்லது *பிவேரியா பேசியானா*5 கிராம் /லிட்டர் மற்றும் லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

கொல்லிமலை மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மிளகு கொடிகளில் வாடல் நோய்களின் தாக்கம் அதிக அளவில் காணப்படுகிறது. இந்நோயினை கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.

- நோய் தென்பட்டவுடன் போர்டோ கலவை (1 சதம்) அல்லது மேன்கோசெப் 64% + மெட்டலாக்ஸில் 8% 72 WP கலவை மருந்தை லிட்டருக்கு 2 கிராம் என்ற அளவில் தெளித்து கொடிகளின் வேர் பகுதிகளின் மண்ணை நனைக்கவும்.
- பூஞ்சாணக்கொல்லிகள் பயன்படுத்தாத சமயத்தில் *டிரைக்கோடெர்மா அஸ்பரெல்லம்* (எக்டருக்கு 2.5 கிலோ) மற்றும் *பேசில்லஸ் சப்டிலிஸ்* (எக்டருக்கு 2.5 கிலோ) நுண்ணுயிரிகளை தொழு உரத்துடன் கலந்து பின் பயிரின் வேர்ப்பகுதியில் மண்ணில் இட வேண்டும்.
- சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரத்தில் உள்ள மிளகு செடியில் வேர் முடிச்சு நூற்புழுவின் தாக்குதல் கண்டறியப்பட்டது. நன்கு மக்கிய தொழுவுரத்துடன் கலந்து ஒரு செடிக்கு 10 கிராம் வீதம் *பர்பியூரியோசிலியம் லில்லாசினியம்* ஐ மண்ணில் இடுவது அல்லது ஒரு செடிக்கு 100 கிராம் வீதம் கார்போஃப்யூரான் 3G (Carbofuran 3G)–ஐ மண்ணில் இடுவது பரிந்துரைக்கப்படுகிறது.

**10. மலர் வகைப் பயிர்கள்**

**மல்லிகை**

பூ மொக்குத்துளைப்பான் தாக்குதல் ஈரோடு, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் காணப்பட்டது. இவற்றின் தாக்குதலைக் கட்டுப்படுத்த தயாக்குளோப்பிரைட்@240% SC – 1 மில்லி /லிட்டர் அல்லது ஸ்பைனோசாட் 45% SC 0.5 மிலி/லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**11.மல்பெரி:**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் கிராமத்தில் உள்ள மல்பெரித் தோட்டத்தில், வேர் முடிச்சு நூற்புழு தாக்குதல் கண்டறியப்பட்டது. ஹெக்டேருக்கு 5 கிலோ 'பர்பூரியோசிலியம் லைலாசினியம்' (*Purpureocillium lilacinum*) மற்றும் 200 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை அடி உரமாக இட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.

**தேனீக்களைத்தாக்கும்புதிய பூச்சிபற்றி எச்சரிக்கை**

சமீபத்தில் தேனீ வளர்ப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் புதிய பூச்சியான சிறிய தேன்கூட்டு வண்டு' (Small Hive Beetle – *Aethinatumida*), நைட்யூலிடே )Nitidulidae) குடும்பத்தைச் சேர்ந்தது, தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ளதுஇந்த . ) வண்டு இந்தியத் தேனீக்கள்*Apis cerana indica*), இத்தாலியத் தேனீக்கள் )*Apis mellifera*), கொம்பில்லாத் தேனீக்கள் )*Tetragonulairidipennis*), மலைத்தேனீக்கள் )*Apis dorsata*) மற்றும் பம்பிள் தேனீக்களின் )bumble bees) கூட்டுகளைத் தாக்கி அழிக்கிறதுதற்போது இதன் பரவல் உலகம் முழுவதும் பல நாடுகளில் . .காணப்படுகிறது

கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஆனைமலை மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் உள்ள தேனீப் பண்ணைகளில் இப்பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. விவசாயிகள் பராமரிக்கும் இந்தியத் தேனீ, இத்தாலியத் தேனீ மற்றும் இயற்கையாகக் காணப்படும் மலைத்தேனீக் கூடுகளில் இந்தச் சிறிய தேன்கூட்டு வண்டின் தாக்குதல் கவனிக்கப்பட்டுள்ளது.

வெப்பமண்டல மற்றும் அதிக ஈரப்பதம் கொண்ட வானிலை இதன் பெருக்கத்திற்குச் சாதகமாக இருப்பதால், தமிழ்நாட்டில் உள்ள தேனீ வளர்ப்போர்கள், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இந்த புதிய பூச்சி குறித்து மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். இது பரவாமல் கட்டுப்படுத்த வழக்கமான கண்காணிப்பும் சோதனையும் மிகவும் அவசியமாகும்.

**மேலும் தொடர்புக்கு:**


1. இயக்குநர்
பயிர் பாதுகாப்பு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் –641 003.
தொலைபேசி எண் :0422–6611237

2. பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் பூச்சியியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் –641 003,
தொலைபேசி எண் :0422–6611214 / 6611414

3. பேராசிரியர் மற்றும் தலைவர்
தாவர நோயியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் –641 003,
தொலைபேசி எண் :0422–6611226

4. பேராசிரியர் மற்றும் தலைவர்
நூற்புழுவியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் –641 003.
தொலைபேசி எண் :0422–6611224